**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No. 213/2016**

**நாள்.11.02.2026**

**வா.சா. 2- முத்துச்சாமி**

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசார ணை**

நான் யாருக்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சுந்தருக்காக. எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை சுந்தர் சொல்லி வந்தேன். வாதிகளை எனக்கு எப்படி தெரியும் என்றால் வீராச்சாமி எனக்கு மாமா. வாதிகளின் சொத்து பற்றி எனக்குத் தெரியுமா என்றால் 10 ஏக்கர் 8 செண்ட், என் தாத்தாவிற்குள்ள பூர்வீக சொத்து. 1வது தபசில் சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் அழகுநேரியில் உள்ளது. 1வது தபசில் சொத்து சின்னச்சாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் அவருக்கும் பாத்தியம் உண்டு. 1வது தபசில் சொத்து பற்றி செல்லையா நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்யவில்லை. 1வது தபசில் சொத்து பற்றி செல்லையா பத்திரம் முடித்துள்ளாரா என்றால் தெரியாது. 1வது தபசில் சொத்து 56 செண்ட் பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியுமா என்றால் பூர்வீக சொத்து. 2 வது தபசில் சொத்து யாருக்குப் பாத்தியப்பட்டது என்றால் சின்னச்சாமிக்கு பாத்தியப்பட்டது. வாய்மொழி பாகம் பிரித்துக்கொண்டது பற்றி எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. எந்த ஆண்டு வாய்மொழி பாகம் பிரித்துக்கொண்டது என்றால் தெரியாது. 2 வது தபசில் சொத்து குறித்து பத்திரம் போடப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. 1, 2 தபசில் சொத்துக்கள் சின்னச்சாமிக்கு பாத்தியப்பட்டது செல்லையாவிற்கு பாத்தியப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. முத்தையா மகன் விசுவாசம் தெரியுமா என்றால் சிறிய பிள்ளையாக இருக்கும்போது தெரியும். அவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் உயிருடன் இல்லை. வாகைகுளத்தை சேர்ந்த தூங்கன் மகன் கருப்பையா தெரியுமா என்றால் தெரியாது. 2 வது தபசில் சொத்தை பற்றி முத்துப்பாண்டிக்கு உயில் ஆவணம் பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது.

1, 2 தபசில் சொத்துக்கள் சின்னச்சாமிக்கு பாத்தியப்பட்டது செல்லையாவிற்கு பாத்தியப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. எனது சாட்சியம் பொய்யானது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.11 17:45:58 +0530